**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 32/2013 |
| Prosecution Witness | : | அ.சா. 10 |
| Name | : | ரத்தினாம்பாள் (Retired Inspector) |
| Father's/Husband Name: | : | ஆர்தர் தேவராஜ் |
| Address : | : | இலுப்பூர் |
| Age | : | 63/2024 |

**தேதி: 11 /09/2024**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S.தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **(எதிரி ஆஜர் இல்லை).**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2019 அன்று ஓய்வு பெற்று மேற்கண்ட முகவரியில்வசித்து வருகிறேன். நான் மாவட்ட காவல் குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 01.03.2010ம் தேதி 15 மணிக்கு காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வரப்பெற்ற புகாரை பெற்று உத்தரவின்படி மாவட்ட குற்றபிரிவு குற்ற எண். 3/2010 சட்டப்பிரிவுகள் 406, 420, 463, 464, 465, 467, 438, 470, 471, 120 பி இதச – ப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கை பதிவு செய்த பிறகு மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து முதல் தகவல்அறிக்கை பதிவு செய்ய வேண்டி உத்தரவு வந்தது. 03.07.2008 லிருந்து 29.06.2009 வரை குற்ற நிகழ்வு நடந்ததாக முதல்தகவல் அறிக்கையில்குறிப்பிட்டுள்ளேன். நான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த விவரத்தை பொது நாட்குறிப்பேட்டில் குறிப்பிடவில்லை. நான் முதல் நிலை விசாரணை மேற்கொள்ளவில்லை. என் கைக்கு புகார் வந்த தேதி ஞாபகமில்லை. என் கைக்கு புகார் வந்தததில் இருந்து ஒருவாரம் அல்லது 10 நாட்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பேனா என்றால் ஞாபகமில்லை. காலதாமத்திற்கு காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை. நான் முதல்நிலை விசாரணை செய்யாமல் எதிரி யார் என்ற உண்மைத்தன்மை தெரிந்துகொள்ளாமல் என்னிடம் வந்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல்அ றிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகுதான் விசாரணை மேற்கொள்ளப்படும்.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-.
Judicial Magistrate No.I,
Perambalur.

JMPBLR